KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

**HURAIAN SUKATAN PELAJARAN**
**KURIKULUM BERSEPADU SEKOLAH MENENGAH**

# BAHASA TAMIL

## தமிழ்மொழி

## TINGKATAN / படிவம் 5

## KBSM

Pusat Perkembangan Kurikulum
Kementerian Pendidikan Malaysia

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ருக்குன் நெகாரா | v |
| தேசியக் கல்வித் தத்துவம் | vii |
| இயக்குநர் உரை | ix |
| முன்னுரை | 1 |
| குறியிலக்கு | 2 |
| நோக்கம் | 2 |
| கலைத்திட்ட அமைப்பு | 3 |
| பிறரிடைத் தொடர்புத்துறைக்கான கற்றல்பேறு | 4 |
| இலக்கணம் | 35 |
| இலக்கியம் | 38 |

# ருக்குன் நெகாரா

இறைவன்மீது நம்பிக்கை வைத்தல்
பேரரசருக்கும் நாட்டுக்கும் விசுவாசம் செலுத்துதல்
அரசியலமைப்புச் சட்டத்தை உறுதியாகக் கடைப்பிடித்தல்
சட்டமுறைப்படி ஆட்சி நடத்துதல்
நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுதல்

# தேசியக் கல்வித் தத்துவம்

மலேசியக் கல்வியானது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மீகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து சமன்நிலையும் இயைபும் பெற தனி மனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். இம்முயற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுக் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும் செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

## KATA PENGANTAR

Huraian Sukatan Pelajaran ialah dokumen yang memperincikan Sukatan Pelajaran yang bertujuan untuk memenuhi cita-cita murni dan semangat Falsafah Pendidikan Kebangsaan, dan menyediakan murid menghadapi arus globalisasi serta ekonomi berasaskan pengetahuan pada abad ke-21.

Dokumen ini menyarankan strategi pengajaran dan pembelajaran yang merangkumi pelbagai aktiviti dan penggunaan sumber. Guru digalakkan menggunakan kreativiti untuk memilih, menyusun dan mengolah aktiviti mengikut kesesuaian murid. Huraian ini diharapkan dapat membantu guru merancang dan melaksanakan pengajaran dan pembelajaran secara berkesan.

Dalam melakukan aktiviti pengajaran dan pembelajaran, guru diharapkan dapat memberikan penekanan pada unsur bernilai tambah yang difikirkan sesuai dalam aspek pedagogi. Di samping itu, nilai murni dan semangat patriotik serta kewarganegaraan tetap diutamakan. Semua elemen ini diharapkan dapat memberikan keyakinan kepada murid dan boleh diaplikasikan dalam kehidupan harian dan dunia pekerjaan.

Guru perlu sentiasa peka terhadap tahap penggunaan dan penguasaan bahasa Tamil murid dengan mengambil kira kesepaduan ilmu, nilai dan amalan. Pengajaran dan pembelajaran dirancang supaya dapat melahirkan murid yang boleh berkomunikasi serta meneruskan warisan budaya Tamil yang sesuai dengan kesejahteraan diri, masyarakat dan negara.

Dalam menyediakan Huraian Sukatan Pelajaran yang disemak semula ini banyak pihak yang terlibat terutama guru, pensyarah maktab dan universiti, pegawai Kementerian Pendidikan, dan individu yang mewakili badan-badan tertentu.

Kepada semua pihak yang telah memberikan sumbangan kepakaran, masa, dan tenaga sehingga terhasilnya Huraian Sukatan Pelajaran ini, Kementerian Pendidikan merakamkan setinggi-tinggi penghargaan dan ucapan terima kasih.

**(Dr. SHARIFAH MAIMUNAH BT. SYED ZIN)**
Pengarah
Pusat Perkembangan Kurikulum
Kementerian Pendidikan Malaysia

## முன்னுரை

நம் நாட்டின் கல்விக் கொள்கைக்கேற்ப, இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்மொழி ஒரு கூடுதல் மொழிப்பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. இதற்குரிய கலைத்திட்டம் தொடக்கப்பள்ளித் தமிழ்க் கலைத்திட்டத்தின் வளர்ச்சியாக விரிவடைகிறது. தொடக்கப்பள்ளியில் பெற்ற தமிழ்மொழியாற்றலை மேலும் வளப்படுத்துவதோடு தேசியக் கல்வித் தத்துவத்திற்கிணங்க மாணவர்களின் அறிவாற்றல், ஆன்மீகம், உடல், உள்ளம் ஆகிய கூறுகளிலும் சமன்நிலை வளர்ச்சி அடைவதை இக்கலைத்திட்டம் வலியுறுத்துகிறது.

நாட்டின் தொலைநோக்குக் கொள்கைக்கேற்ப, மலேசிய மக்களிடையே ஒற்றுமையுணர்வையும் நாட்டுப்பற்றையும் மேலும் வளர்ப்பதற்கு இக்கலைத்திட்டம் முதன்மையளிக்கிறது. தமிழ் பேசுவோர் மட்டுமல்லாமல் பிறமொழிக்காரர்களும் தமிழைப் பயிலுவதற்கு ஏற்றவாறும் இக்கலைத்திட்டம் வரையறுக்கப்பட்டுள்ளது.

தமிழ் வழங்கும் நாடுகளுக்கிடையே சமூக, பண்பாடு, வணிகத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவும் நட்புறவை வளர்த்துக்கொள்ளவும் தமிழ்மொழியைப் பயன்படுத்திக்கொள்வதற்கு இக்கலைத்திட்டம் வழிகாண்கிறது. இடைநிலைப்பள்ளியில் தமிழ்ப் பயிலும் மாணவர்கள் பொதுநோக்கமும் பரந்த அறிவும் பெற்றவராகத் தம்மை வளர்த்துக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. நூலறிவு, நன்னெறியுணர்வு, சிந்தனைத்திறன், தகவல் தொழில்நுட்பத் தொடர்பு ஆகிய கூறுகளும் வலியுறுத்தப்படுகின்றன.

இந்த ஆவணம், இடைநிலைப்பள்ளிகளில் கற்பிக்கப்படவேண்டிய தமிழ்மொழிக்கான முழுமையான பாடத்திட்டமாகும். மாணவர்கள் அடைய வேண்டிய குறியிலக்கு, நோக்கம், கற்றல்பேறு ஆகியன வரையறுக்கப்பட்டுள்ளன. இதன் உள்ளடக்கமாக மொழிப்பயன்பாடு, மொழித்திறன், மொழிவளம் ஆகியன கொடுக்கப்பட்டுள்ளன.

இப்பாடத்திட்டத்தை அடிப்படையாகக்கொண்டு படிவம் ஒன்று முதல் ஐந்து வரை ஒவ்வொரு படிவத்திற்கும் தனித்தனியே பாடத்திட்ட விளக்கவுரைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்விளக்கவுரைகளில் அவ்வவ்வாண்டிற்கான திறன்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

**குறியிலக்கு**

சமுதாயத் தொடர்பினை மேம்படுத்துதல், தகவல்களை முறையாகப் பெற்றுக் கையாளுதல், தமிழ்மொழியினைப் போற்றிப் பேணுதல் ஆகியவற்றில் மாணவர்கள் சிறந்து விளங்க நல்ல தமிழறிவைப் பெறவேண்டும் என்பதே இக்கலைத்திட்டத்தின் குறியிலக்காகும்.

**நோக்கங்கள்**

இடைநிலைப்பள்ளியின் இறுதியில் மாணவர்கள் அடைய வேண்டியவை:

1. பேச்சு அல்லது எழுத்தின்வழி பிறருடன் கருத்துப் பரிமாற்றம் செய்தல், நல்ல தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளுதல், சிக்கல்களைக் களைதல், தேவைகளை நிறைவு செய்தல், தேவைப்படும் சேவைகளையும் பொருள்களையும் கேட்டுப்பெறுதல் ஆகியவற்றைத் திறமையாக மேற்கொள்ளுதல்.

2. அறிவும் கருத்தும் பெறுவதற்குப் பல்வேறு மூலங்களிலிருந்து பார்த்த, கேட்ட, வாசித்த தகவல்களை ஆராய்ந்து அறிதல்.

3. கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் சிக்கல்களைக் களைந்து அவற்றை வாய்மொழியாகவும் எழுத்து வடிவிலும் பிறருக்கு வெளியிடுதல்.

4. பல்வேறு படைப்புகளைப் பார்த்தும், கேட்டும், வாசித்தும் அவற்றிற்கேற்பத் துலங்குதல்.

5. தன் சிந்தனையைப் படைப்பாற்றலுடன் வாய்மொழியாகவும் எழுத்து வடிவிலும், விளைபயனுள்ள வகையில் வெளியிடுதல்.

6. நன்னெறிப்பண்பு, இணக்கப்போக்கு, நாட்டுப்பற்று ஆகியவற்றை உய்த்துணர்ந்து அதன்படி நடத்தல்.

**பாடத்திட்ட அமைப்பு**

சமுதாயத்தில் பயன்படுத்தப்படும் நல்ல தமிழ்மொழி வழக்கின் அடிப்படையில் இப்பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல்பேறுகள் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய மொழித்திறன்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

**கற்றல்பேறு**

கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய மொழித்திறன்களை அடிப்படையாகக்கொண்டு கற்றல்பேறுகள் அமைக்கப்பட்டுள்ளன. கற்றல்பேறுகளை மாணவர்கள் முழுமையாக அடையும் வகையில் ஆசிரியரின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் அமைதல் வேண்டும். கற்றல்பேறுகள், மொழித்திறன்களையும், மொழிமுறைமையில் அடங்கியுள்ள மொழிப்பயன்பாட்டு விதிகளையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. அவற்றோடு கலைத்திட்டத்தில் அடங்கியுள்ள தலைப்புகளையும் அவை உள்ளடக்கியுள்ளன.

I **பிறரிடைத் தொடர்புத்துறைக்கான கற்றல்பேறு.**

பிறரிடைத் தொடர்புத்துறை மாணவர்களின் திறமையை மையமாகக் கொண்டுள்ளது. பிறருடனான தொடர்பைத் தொடங்கவும் நீட்டித்திருக்கவும், உணர்வு, சமூகச் சிந்தனை, கருத்து ஆகியவற்றைப் பகிர்ந்துகொள்ளவும் இத்துறை உதவுகிறது. அத்துடன் கலந்துரையாடலின்வழி சேவைகளையும் பொருள்களையும் பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது திறம்படக் கலந்துரையாடல், விவாதித்தல், கலந்தாராய்தல், பேச்சு வார்த்தை நடத்தல் ஆகிய கூறுகளை உள்ளடக்கியுள்ளது.

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 1.1 பிறருடன் உரையாடும்போது முக்கியக் கருத்துகளை அடையாளங் காண்பர்; புரிந்து கொள்வர்; பேச்சு, எழுத்து வழியாகச் சரியான மொழிநடையில் பிறருடன் தொடர்பு கொள்வர்.<br>. | **படிநிலை 1**<br>உரையாடலில் காணப்படும் முக்கியக் கருத்துகளை அடையாளங்கண்டு புரிந்து கொள்வர்.<br><br>**படிநிலை 2**<br>பிறருடன் உரையாடும் போது சரியான மொழி நடையில் தொடர்புகொள்வர். | • உரையாடலைச் செவிமடுத்தல்.<br>• முக்கியக் கருத்துகளை அடையாளங்காணுதல்.<br>• அடையாளங்கண்ட முக்கியக் கருத்துகளை முதன்மைக்கேற்ப வகைப்படுத்துதல்.<br>• அவற்றைத் தொகுத்து எழுதுதல்.<br><br>• தலைப்பையொட்டி விவரங்களைச் சேகரித்தல்.<br>• துணைக் கருத்துகளையும் இதர விவரங்களையும் திரட்டுதல்.<br>• மொழிநடையை முறைப்படுத்துதல்.<br>• முறைப்படுத்திய கருத்துகளைக் கொண்டு பிறருடன் உரையாடுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 3**<br>பேச்சு, எழுத்து மூலமாக சரியான மொழி நடையில் பிறருடன் தொடர்புகொள்வர். | • தலைப்பையொட்டிக் கருத்துகளைச் சேகரித்தல்.<br>• துணைக் கருத்துகளையும் இதர விவரங்களையும் திரட்டுதல்.<br>• திரட்டிய கருத்துகளைச் சரியான மொழி நடையில் முறைப்படுத்துதல்.<br>• முறைப்படுத்திய கருத்துகளைக்கொண்டு கடிதம் ஒன்றை எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 1.2 சரியான மொழி, பண்பு ஆகியவற்றின் வாயிலாக நியாயமான கோரிக்கைகளை விடுப்பர்; மற்றவர்களின் கோரிக்கைகளுக்கும் செவி சாய்த்துத் துலங்குவர். | **படிநிலை 1**<br>தலைப்பையொட்டி ஏரணத்துடன் சிந்தித்துக் கலந்துரையாடுவர். | • தலைப்பையொட்டிக் கருத்துகளைச் சேகரித்தல்.<br>• சேகரித்த கருத்துகளை ஏரணத்துடன் சிந்தித்து அதனை முறைப்படுத்துதல்.<br>• முறைப்படுத்திய கருத்துகளுக்குகேற்ற இதர விவரங்களைச் சேகரித்தல்.<br>• சேகரித்த கருத்துகளைக் குழுவில் கலந்துரையாடிக் கருத்துப்பரிமாற்றம் செய்தல்.<br>• கருத்துகளைக் கட்டுரை வடிவில் படைத்தல். |
| | **படிநிலை 2**<br>கோரிக்கைகளுக்கு ஏரணத்துடன் சிந்தித்துத் தீர்வு காண்பர். | • கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளை கலந்துரையாடி நியாயமான கோரிக்கையைத் தெரிவு செய்தல்.<br>• தெரிவு செய்த கோரிக்கையின் தகவல்களை ஏரணத்துடன் விவாதித்து, நோக்கத்தையும் விளைவையும் ஆராய்தல்.<br>• கோரிக்கைக்கேற்ற ஏற்புடைய தீர்வினை அடையாளங்காணுதல்.<br>• கடிதம் எழுதுதல். |
| | **படிநிலை 3**<br>கோரிக்கைகளுக்கான தீர்வை அறிக்கை வடிவில் சமர்ப்பிப்பர். | • கருத்தூற்றுமுறையில் சிக்கலுக்கான காரணங்களை ஆராய்தல்.<br>• கோரிக்கைகளுக்கேற்ற தீர்வினைக் கலந்துரையாடிக் குறிப்பெடுத்தல்.<br>• கிடைக்கப்பெற்ற தீர்வினை அறிக்கை வடிவில் படைத்தல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 2.1 சேவை, பொருள் ஆகியவற்றைப் பெறுவதற்காக விண்ணப்பிப்பதோடு பிறரின் கோரிக்கைகளையும் நிறைவேற்றுவர். | **படிநிலை 1**<br>சேவை, பொருள் ஆகியவற்றைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் முறையை அறிவர். | • சேவை, பொருள் ஆகியவற்றை விளக்கும் எழுத்துப் படிவங்களை வாசித்தல்.<br>• குறிப்பிட்ட சேவை அல்லது பொருளைப் பெறுவதற்கான முறையை அறிதல்.<br>• குறிப்பிட்ட சேவையைப் பெறுவதற்குப் பாரங்களைப் பூர்த்தி செய்தல். |
| | **படிநிலை 2**<br>கோரிக்கைகளை வாசித்துப் புரிந்துகொண்டு நிறைவேற்றுவர். | • பிறருடைய கோரிக்கையை வாசித்து அதன் தேவையை அடையாளங்காணுதல்.<br>• கோரிக்கையின் தேவைக்கேற்றத் தீர்வை ஏரணத்துடன் கலந்துரையாடி முடிவு செய்தல்.<br>• எடுக்கப்பட்ட முடிவுக்கேற்பக் கோரிக்கையை நிறைவேற்றுதல். |
| | **படிநிலை 3**<br>சேவை, பொருள் ஆகியவற்றைப் பெறுவதற்காக விண்ணப்பிப்பர். | • சேவை அல்லது பொருளைப் பெறுவதற்கான முறையை அறிதல்.<br>எ. கா: மின்னியல் வணிகம்<br>• ஒரு பொருள் அல்லது சேவையைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கத் தேவைப்படும் முக்கியக் கூறுகளை அறிதல்.<br>• ஒரு பொருள் அல்லது சேவையைப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்தல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 3.1 ஒன்றைப்பற்றிக் கலந்தாய்வு செய்து, பிறருடன் ஒன்றிணைந்து முடிவு செய்வர்; முக்கியக் கருத்துகளைக் குறிப்பெடுப்பர்; பிறருக்கும் கூறுவர். | **படிநிலை 1**<br>ஒன்றைப்பற்றிய கருத்துகளைச் சேகரித்து விவாதிப்பர். | • குறிவரைவில் அடங்கியுள்ள கருத்துகளைச் சேகரித்தல். எ.கா: சாலை விபத்து<br>• முக்கியக் கருத்துகளுக்குத் தொடர்புடைய இதர கருத்துகளைப் பல்வேறு ஊடகங்களின் துணையோடு தொகுத்தல்.<br>• சேகரிக்கப்பட்ட கருத்துகளைக் கலந்துரையாடல்வழி சார்பு எதிர்வு கருத்துகளாக வகைப்படுத்துதல்.<br>• வகைப்படுத்திய கருத்துகளைக்கொண்டு விவாதக் கட்டுரை எழுதுதல். |
| | **படிநிலை 2**<br>சார்பு எதிர்வு கருத்துகளை அடையாளங்கண்டு வகைப்படுத்தி வாதிடுவர். | • தலைப்பையொட்டிய கருத்துகளைக் கலந்துரையாடல்வழி திரட்டுதல்.<br>• சார்பு எதிர்வு கருத்துகளை வகைப்படுத்துதல்.<br>• சார்பு எதிர்வு கருத்துகளுக்கேற்றத் துணைக் கருத்துகள், எடுத்துக்காட்டுகள் ஆகியவற்றைத் திரட்டுதல்.<br>• சொற்போரில் பங்கெடுத்தல். |
| | **படிநிலை 3**<br>கருத்துகளைக் குறிப்பெடுத்து அறிக்கைவழி வெளியிடுவர். | • தலைப்புக்கேற்றக் கருத்துகளைக் கலந்துரையாடிச் சேகரித்தல்.<br>• கருத்துகளுக்கேற்றத் துணைக் கருத்துகள், இதர விவரங்கள், எடுத்துக்காட்டுகள் ஆகியவற்றைக் குறிப்பெடுத்தல்.<br>• திரட்டிய குறிப்புகளைக்கொண்டு அறிக்கை எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 4.1 பேச்சுவார்த்தையின் போது கருத்துத் தெளிவு, கொள்கைப் பிடிப்பு, பரந்த மனப்பான்மை ஆகியவற்றுடன் கருத்துகளைத் தன்னம்பிக்கையோடு மென்மையாகவும் முறையாகவும் வெளிப்படுத்துவர். | **படிநிலை 1**<br>பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சிக்கலை அடையாளங்கண்டு அதற்குத் தொடர்பான கொள்கையைத் தெளிவுடன் கூறுவர்; குறிப்பெடுப்பர். | • கொடுக்கப்பட்ட சூழலுக்கேற்றச் சிக்கலை அடையாளங்காணுதல்.<br>• அதற்கான காரணகாரியங்களைப் பற்றிக் கலந்துரையாடுதல்.<br>• கிடைக்கப்பெற்ற விவரங்களைத் தொகுத்துத் தெளிவுடன் கூறுதல்; குறிப்பெடுத்தல். |
| | **படிநிலை 2**<br>பேச்சுவார்த்தையின்போது கொள்கைப் பிடிப்புடனும் பரந்த மனப்பான்மையுடனும் கருத்துகளை வெளிப்படுத்துவர். | • சிக்கலைக் களைய பேச்சு வார்த்தையின்போது முன்வைக்க வேண்டிய கருத்துகளை அடையாளங்காணுதல்.<br>• பேச்சு வார்த்தைக்கான தன்னுடைய கொள்கைப் பிடிப்பை அடையாளங்காணுதல்.<br>• பேச்சுவார்த்தையின்வழி கிடைக்கப்பெற்ற கருத்துகளை மையமாகக் கொண்டு ஓர் உரையாடல் தயாரித்தல். |
| | **படிநிலை 3**<br>பேச்சுவார்த்தையின்போது முன்வைக்க வேண்டிய கருத்துகளைத் தன்னம்பிக்கையுடனும் மென்மையாகவும் முறையாகவும் கூறுவர். | • கொடுக்கப்பட்ட சூழலைப்பற்றிக் கலந்துரையாடிக் கருத்துகளை அடையாளங்காணுதல்.<br>• கருத்துகளை வலுப்படுத்த துணைக் கருத்துகளையும் இதர தகவல்களையும் சேகரித்தல்.<br>• கருத்துகளை முதன்மைக்கேற்ப நிரல்படுத்துதல்.<br>• சேகரிக்கப்பட்ட கருத்துகளைத் தன்னம்பிக்கையுடனும், மென்மையாகவும், முறையாகவும் வகுப்பின்முன் படைத்தல்.<br>எ. கா. போலி நடிப்பு |

## II. தகவல்துறைக்கான கற்றல்பேறு

மாணவர் தாங்கள் பெறும் தகவல்களை அவர்கள் நிலைக்கேற்றவாறு சரியாக எடுத்துக்கூறுவர்.

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 5.1 தகவல்களைப் பெறுவதற்குக் குறிப்பெடுப்பர். | **படிநிலை 1**<br>உரை, சொற்பொழிவு ஆகியவற்றைச் செவிமடுத்து முக்கியத் தகவல்களைக் குறிப்பெடுப்பர். | • உரை அல்லது சொற்பொழிவைச் செவிமடுத்தல்.<br>• முக்கியத் தகவல்களை அடையாளங்காணுதல்.<br>• குறிப்பெடுத்த விவரங்களைக் கருத்துப்பரிமாற்றம் செய்தல்.<br>• அக்கருத்துகளைச் சட்டக வடிவில் எழுதுதல். |
| | **படிநிலை 2**<br>உரைநடைப் பகுதி, பேட்டி ஆகியவற்றைச் செவிமடுத்துத் தகவல்களைக் குறிப்பெடுப்பர். | • உரைநடைப் பகுதி, பேட்டி ஆகியவற்றைச் செவிமடுத்தல்.<br>• அவற்றிலுள்ள முக்கியத் தகவல்களை அடையாளங்கண்டு மனவோட்டவரைவில் குறிப்பெடுத்தல்.<br>• குறிப்புகளைக்கொண்டு விவாதக் கட்டுரை எழுதுதல். |
| | **படிநிலை 3**<br>பட்டிமன்ற நிகழ்வினைச் செவிமடுத்துத் தகவல்களைக் குறிப்பெடுப்பர். | • பட்டிமன்றம் ஒன்றனைச் செவிமடுத்தல்.<br>• பட்டிமன்றத்தில் பயன்படுத்திய அருஞ்சொற்களின் பொருளை அறிதல்.<br>• முக்கியக் கருத்துகளையும் துணைக் கருத்துகளையும் அடையாளங்காணுதல்.<br>• அக்கருத்துகளைச் சார்பு எதிர்வு என்ற தலைப்புகளில் வரிபடக்கருவியில் குறித்தல்.<br>• பட்டிமன்றத்தில் பங்கெடுத்தல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 5.2 பல்வேறு எழுத்துப் படிவங்களை வாசித்துத் தகவல்களைத் திரட்டுவர். | **படிநிலை 1**<br>இயற்கையைப் பாடுபொருளாகக் கொண்ட கவிதைகளை வாசித்துத் தகவல்களைத் திரட்டுவர். | • இயற்கையைப் பாடுபொருளாகக்கொண்ட கவிதைகளை வாசித்தல்.<br>• கவிதைகளில் வரும் சொல், சொற்றொடர் போன்றவற்றிற்குப் பொருள் காணுதல்.<br>• கவிதையின் உட்பொருளை அறிதல்.<br>• கவிதையிலுள்ள தகவல்களைத் தொகுத்து எழுதுதல். |
| | **படிநிலை 2**<br>மொழிப்பற்றுக் கவிதைகளை வாசித்துத் தகவல்களைத் திரட்டுவர். | • தெரிவு செய்யப்பட்ட மொழிப்பற்றுக் கவிதைகளை வாசித்து அதில் வரும் சொல், சொற்றொடர்களின் பொருளை அறிதல்.<br>• கவிதையில் இடம்பெற்றுள்ள முக்கியத் தகவல்களைக் குறிப்பெடுத்தல்.<br>• குறிப்பெடுத்த தகவல்களை நிரல்படுத்திக் கூறுதல்.<br>• கவிதை உணர்த்தும் உட்கருத்துகளை விவாதித்தல்.<br>• கவிதையை உரைநடையில் எழுதுதல். |
| | **படிநிலை 3**<br>நாட்டுப்பற்றுக் கவிதைகளை வாசித்து தகவல்களைத் திரட்டுவர். | • கொடுக்கப்பட்ட கவிதைகளை வாசித்தல்.<br>• கவிதைகளில் வரும் சொல், சொற்றொடர் போன்றவற்றிற்குப் பொருள் காணுதல்.<br>• கவிதைகளின் பாடுபொருளை அடையாளங்காணுதல்.<br>• கவிதைகளின் தெரிபொருளையும் மறைபொருளையும் ஆசிரியரின் துணையுடன் புரிந்துகொள்ளுதல்.<br>• கவிதைகளை உரைநடையில் எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 6.1 குறிவரைவு, மனவோட்டவரைவு போன்றவற்றின்மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்களை ஆராய்ந்து தொகுப்பர். | **படிநிலை 1**<br>கருப்பொருள், முதன்மைக் கருத்துகள், துணைக் கருத்துகள் ஆகியவற்றை அடையாளங்கண்டு மனவோட்டவரைவில் அடங்கியுள்ள தகவல்களை ஆராய்ந்து தொகுப்பர். | • தேர்ந்தெடுக்கப்பட்ட மனவோட்டவரைவில் அடங்கியுள்ள தகவல்களைக்கொண்டு கருப்பொருள், முக்கியக் கருத்துகள், துணைக் கருத்துகள் ஆகியவற்றைக் கலந்துரையாடி அடையாளங்காணுதல்.<br>• மனவோட்டவரைவில் உள்ள முக்கியத் தகவல்களைத் தெரிநிலை, புதைநிலை கருத்துகளின் அடிப்படையில் தொகுத்து எழுதுதல். |
| | **படிநிலை 2**<br>காரணகாரியத் தொடர்பின்மூலம் மனவோட்டவரைவில் அடங்கியுள்ள முக்கியத் தகவல்களை ஆராய்ந்து தொகுப்பர். | • மனவோட்டவரைவில் உள்ள தகவல்களைத் தழுவி கருத்துணர்ப் பயிற்சிகளைச் செய்தல்.<br>• மனவோட்டவரைவில் அடங்கியுள்ள கருத்துகளின் காரணகாரியத் தொடர்பை ஆராய்தல்.<br>• அத்தகவல்களை ஆராய்ந்து தொகுத்தல். |
| | **படிநிலை 3**<br>மனவோட்டவரைவில் அடங்கியுள்ள தகவல்களைச் சிறு தலைப்புகளில் வகைப்படுத்தி ஆராய்ந்து தொகுப்பர். | • கொடுக்கப்பட்ட மனவோட்டவரைவைப் பகுப்பாய்வு செய்யத் தேவையான துணைக் கருத்துகள், விளக்கங்கள், சான்றுகள் ஆகியவற்றை விவாதித்துச் சிறு தலைப்புகளில் வகைப்படுத்துதல்.<br>• சிறு தலைப்புகளில் கிடைக்கப்பெற்ற தகவல்களின் காரணகாரியத்தை ஆராய்தல்.<br>• பகுப்பாய்வு செய்த கருத்துகளை மதிப்பீடு செய்து தொகுத்து எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 6.2 ஆராய்ந்த தகவல்களைக் கொண்டு ஒரு முடிவுக்கு வருவர். | **படிநிலை 1**<br>தலைப்பு, கருச்சொற்கள் ஆகியவற்றின் துணையுடன் முக்கியக் கருத்துகளையும் அவற்றை வலுப்படுத்தக்கூடிய துணைக் கருத்துகளையும் தொகுத்து ஒரு முடிவுக்கு வருவர். | • கொடுக்கப்பட்ட வாசிப்புப் பகுதியின் தலைப்பையும் கருச்சொற்களையும் அடையாளங்காணுதல்.<br>• அவற்றை அடிப்படையாகக் கொண்டு முக்கியக் கருத்துகளைச் சேகரித்தல்.<br>• குழுவாரியாகக் கலந்துரையாடி முக்கியக் கருத்துகளை வலுப்படுத்தக்கூடிய துணைக் கருத்துகளைத் திரட்டுதல்.<br>• திரட்டிய கருத்துகளைத் தொகுத்து முடிவினைக் கூறுதல். |
| | **படிநிலை 2**<br>கருவாக்கியங்கள், எடுத்துக்காட்டுகள், விளக்கங்கள், காரணகாரியத் தொடர்புகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு முக்கியக் கருத்துகளையும் அவற்றை வலுப்படுத்தக்கூடிய துணைக் கருத்துகளையும் தொகுத்து ஒரு முடிவுக்கு வருவர். | • ஒரு பாடப்பகுதியை வாசித்து விளங்கிக் கொள்ளுதல். எ. கா: ஒரு நிகழ்வு<br>• அப்பகுதியைப் பகுத்தாராய்ந்து, கருவாக்கியம், எடுத்துக்காட்டுகள், காரணகாரியத் தொடர்புகள், விளக்கங்கள் ஆகியவற்றை அடையாளங்கண்டு . நிரலோட்டவரைவில் குறித்தல்.<br>• அவற்றை அடிப்படையாகக் கொண்டு முக்கியக் கருத்துகளையும் அதனை வலுப்படுத்தக்கூடிய துணைக் கருத்துகளையும் ஆராய்தல்.<br>• ஆராய்ந்த கருத்துகளைக் கொண்டு ஒரு முடிவுக்கு வருதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
| --- | --- | --- |
| | **படிநிலை 3**<br>சான்றுகள், புள்ளிவிவரங்கள் ஆகியவற்றின் துணையுடன் முக்கியக் கருத்துகளையும் அவற்றை வலுப்படுத்தக்கூடிய துணைக் கருத்துகளையும் தொகுத்து ஒரு முடிவுக்கு வருவர். | • பாடப்பகுதியை வாசித்துப் புரிந்துகொள்ளுதல்.<br>• பாடப்பகுதியில் வரும் புள்ளிவிவரங்களையும் சான்றுகளையும் குழுவில் விவாதித்து அறிதல்.<br>• அவற்றின் துணையுடன் முக்கியக் கருத்துகளையும் வலுப்படுத்தக்கூடிய துணைக் கருத்துகளையும் பகுத்தாராய்தல்.<br>• பகுத்தாராய்ந்த கருத்துகளை மதிப்பீடு செய்து ஒரு முடிவுக்கு வருதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 7.1 வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும், தெளிவாகவும் கோவையாகவும் விளக்கமளிப்பர். | **படிநிலை 1**<br>காரணகாரியத் தொடர்பான எடுத்துக்காட்டுகளுடன் ஒரு பொருள் அல்லது கருத்தை விவரித்துக் கோவையாகக் கூறுவர். | • தலைப்பையொட்டிய கருத்துகளைப் பல்வேறு மூலங்களிலிருந்தும் ஊடகங்களிலிருந்தும் சேகரித்தல்.<br>• குழுவாகக் கலந்துரையாடிக் கருத்தூற்றுமுறையில் விவரங்களைத் தொகுத்தல்.<br>• கொடுத்த கருத்துகளுக்கேற்றக் காரணகாரியத் தொடர்பான எடுத்துக்காட்டுகளை அடையாளங்காணுதல்.<br>• கருத்துகளைக் கோவையாக எடுத்துக்காட்டுகளுடன் தெளிவாக விவரித்துக் கூறுதல். |
| | **படிநிலை 2**<br>பல்துறை சம்பந்தப்பட்ட எடுத்துக்காட்டுகளுடன் ஒரு பொருள் அல்லது கருத்தைக் கோவையாக விவரித்துக் கூறுவர். | • தலைப்பையொட்டிய கருத்துகளைச் சேகரித்தல்.<br>• அக்கருத்துகளை அடிப்படையாகக்கொண்டு பலதுறை சம்பந்தப்பட்ட எடுத்துக்காட்டுகளைக் கலந்துரையாடித் திரட்டுதல்.<br>எ. கா:<br><u>சமுதாயச் சீர்கேடு</u><br>- பொருளியல்<br>- அரசியல்<br>- சமூகவியல்<br>• திரட்டிய கருத்துகளை வரிசைப்படுத்துதல்.<br>• எடுத்துக்காட்டுகளுடன் கருத்துகளைக் கோவையாக விவரித்து எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
| --- | --- | --- |
| | **படிநிலை 3**<br>ஒரு பொருள் அல்லது கருத்துக்குப் புள்ளிவிவர எடுத்துக்காட்டுகளுடன் கோவையாகக் கூறுவர். | • தலைப்புத் தொடர்பான விவரங்களைச் சேகரித்தல்.<br>• சேகரித்த விவரங்களை வகைப்படுத்துதல்.<br>• திரட்டிய கருத்துகளுக்கேற்ற புள்ளிவிவரங்களை பல்லூடகங்களின்வழி திரட்டுதல்.<br>• திரட்டிய புள்ளிவிவரங்களுடன் கருத்துகளைக் கோவையாக விவரித்துக் கூறுதல்; எழுதுதல்.<br>எ. கா: சுற்றுப்பயணிகளின் வருகை |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 7.3 வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும், தெளிவாகவும் கோவையாகவும் அறிக்கை சமர்ப்பிப்பர். | **படிநிலை 1**<br>பள்ளிச்சூழலில் ஏற்படும் சிக்கல்களை அடிப்படையாகக் கொண்டு முறையீட்டு அறிக்கை தயாரித்தல். | • மாதிரி முறையீட்டு அறிக்கையை வாசித்து அதன் அமைப்பை அறிதல்.<br>• முறையீட்டு அறிக்கையின் உள்ளடக்கத்தைச் சிறு தலைப்புகளில் பட்டியலிடுதல்.<br>• கொடுக்கப்பட்ட தலைப்பிற்கேற்ப கருத்துகளைக் கலந்துரையாடிச் சிறு தலைப்புகளில் குறிப்பெடுத்தல்.<br>• ஆசிரியரின் துணையுடன் முறையீட்டு அறிக்கை தயாரித்தல்.<br>எ.கா:<br>- சிற்றுண்டிச் சாலை (அசுத்தம், ஈக்கள்)<br>- கழிவறை |
| | **படிநிலை 2**<br>குடியிருப்புப் பகுதியில் ஏற்படும் சிக்கல்கள் குறித்து முறையீட்டு அறிக்கை தயாரித்தல். | • முறையீட்டு அறிக்கையின் அமைப்பைப்பற்றி கலந்துரையாடித் தெளிவு பெறுதல்.<br>• கொடுக்கப்பட்ட தலைப்பிற்கேற்ப சிக்கல்களைக் கலந்துரையாடிச் சிறு தலைப்புகளில் குறிப்பெடுத்தல்.<br>• கருத்துகளைத் தொகுத்து முறையான முறையீட்டு அறிக்கை எழுதுதல்.<br>எ.கா:<br>- தொலைபேசி வசதி<br>- மின்சாரம் / தண்ணீர் |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
| --- | --- | --- |
| | **படிநிலை 3**<br>பொதுநலத்தை அடிப்படையாகக் கொண்ட முறையீட்டு அறிக்கை தயாரிப்பர். | • பொதுநலத்தை அடிப்படையாகக் கொண்ட சிக்கல்களைப் பல்வேறு ஊடகங்களிலிருந்து திரட்டுதல்.<br>• சிக்கல்களின் காரணகாரியங்களையும் அதன் விளைவுகளையும் ஆராய்தல்.<br>• ஆராய்ந்த கருத்துகளைக் கோவையாக அறிக்கை வடிவில் முறைப்படுத்துதல்.<br><br>*எ. கா: குடியிருப்பு உடைப்பு*<br>சுற்றுச்சூழல் பாதிப்பு |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 7.4 வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும் செறிவான பொருளடக்கம், பொருத்தமான ஆதாரம், அறிவுப்பூர்வமான, ஏரணமான கருத்துகள் ஆகியவற்றை மிதமான போக்கில் வெளியிடுவர். | **படிநிலை 1**<br>கருத்துச்செறிவோடு மிதமான போக்கில் கருத்துரைப்பர். | • கொடுக்கப்படும் சூழலுக்கேற்ற பொருத்தமான கருத்துகளை அடையாளங்காணுதல்.<br>• கருத்துப்பரிமாற்றத்தின்வழி செறிவான கருத்துகளைத் தெரிவுசெய்தல்.<br>• தொகுத்த கருத்துகளைச் செறிவாகவும் மிதமாகவும் விவாதத்தின்போது முன்வைத்தல். |
| | **படிநிலை 2**<br>கருத்துகளைச் சான்றுகளுடன் மிதமான போக்கில் கருத்துரைப்பர். | • கொடுக்கப்படும் சூழலைப்பற்றி மாணவர் கருத்துகளை வெளியிடுதல்.<br>• முன்வைக்கப்பட்ட கருத்துகளுக்கேற்ற சான்றுகளை ஆராய்தல்.<br>• அவற்றைத் தொகுத்து மிதமான போக்கில் கருத்துரைத்தல். |
| | **படிநிலை 3**<br>கருத்துகளை ஏரணத்துடன் மிதமான போக்கில் வெளியிடுவர். | • கொடுக்கப்படும் சிக்கலுக்கான காரணகாரியங்களை ஆராய்தல்.<br>• சிக்கலுக்கு ஏரணமான தீர்வுகளை அடையாளங்கண்டு கருத்துரைத்தல்.<br>• மிதமான போக்கில் தொகுத்துக் கூறுதல்; எழுதுதல். |

III இலக்கியத்துறைக்கான கற்றல்பேறு.

**இலக்கியத்துறையானது பல்வேறு எழுத்துப் படிவங்களை வாசித்து, அதில் காணப்படும் மொழிச்சிறப்பை உய்த்துணர்தல், ஆக்கப்பூர்வமான அடிப்படையில் தன் எழுத்துப் படிவங்களை உருவாக்குவதோடு மற்ற எழுத்துப் படிவங்களைப்பற்றிய தன் கருத்தைக் கூறுதல், இலக்கியங்களின் நலம் பாராட்டுதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.**

| **கற்றல்பேறு** | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
| --- | --- | --- |
| 8.1 பல்வேறு இலக்கிய வகைகளைப் பொருளுணர்வர்; உய்த்துணர்வர்; போற்றுவர். அவற்றையொட்டிச் சொந்தக் கருத்தைக் கூறுவர். | **படிநிலை 1**<br>பல்வகை இலக்கிய வகைகளைப் பொருளுணர்ந்து பகுத்தாராய்ந்து கருத்துரைப்பர்.<br>- கவிதை<br>- செய்யுள்<br>- கதை<br>- உரைநடை | • கவிதை, செய்யுள், கதை, உரைநடை ஆகிய இலக்கியப் படிவங்களை மௌனமாக வாசித்தல்.<br>• இலக்கியப் படிவங்களில் காணப்படும் நேரடிப் பொருளை விளக்கிக் கூறுதல்.<br>• இலக்கியப் படிவங்களின் மறைபொருளைக் குழுமுறையில் ஆராய்ந்து திரட்டுதல்.<br>• இலக்கியப் படிவங்கள் உணர்த்தும் மறைபொருளை உய்த்துணர்ந்து வெளிப்படுத்துதல்.<br>• இலக்கியப் படிவங்களில் காணப்படும் கருப்பொருளோடு தம் பட்டறிவை ஒப்பிட்டுப் போற்றுதல்.<br>• மனமகிழ்விற்காக இலக்கியப் படிவங்களை வாசித்தல். |

| **கற்றல்பேறு** | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 2**<br>பல்வகை இலக்கிய வகைகளைப் பொருளுணர்ந்து தொகுத்தாராய்ந்து போற்றுவர்.<br>- கவிதை<br>- செய்யுள்<br>- கதை<br>- உரைநடை | • கொடுக்கப்பட்ட இலக்கியப் படிவத்தை மௌனமாக வாசித்தல்.<br>• ஏற்புடைய வரிபடக்கருவிகள்வழி கருத்துகளை ஒருங்கிணைத்துத் தொகுத்தல்.<br>எ. கா: ஒற்றுமை வேற்றுமை காணல்.<br>• இலக்கியப் படிவத்தில் காணப்படும் கருத்து, சொல்லாட்சி, உவமை ஆகியவற்றின் நயங்களைத் தொகுப்பாய்வு செய்தல்.<br>• தொகுத்தாராய்ந்த இலக்கியப் படிவத்தில் காணப்படும் சிறப்பியல்புகளைப் பட்டியலிடுதல்.<br>• இலக்கியப் படிவத்தின் தொடர்பான கருத்துணர்க் கேள்விகளுக்குப் பதிலளித்தல். |

| **கற்றல்பேறு** | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
| --- | --- | --- |
| | **படிநிலை 3**<br>பல்வகை இலக்கிய வகைகளைப் பொருளுணர்ந்து மதிப்பீடு செய்வர்.<br>- கவிதை<br>- செய்யுள்<br>- கதை<br>- உரைநடை | • கொடுக்கப்பட்ட இலக்கியப் படிவத்தை மௌனமாக வாசித்தல்.<br>• இலக்கியப் படிவத்தின் பொருளுணர்ந்து உய்த்துணர்தல்.<br>• இலக்கியப் படிவத்தை உணர்ச்சி, தொனி, வேகம் பொருந்த வாசித்துக் காட்டுதல்.<br>• இலக்கியப் படிவத்தில் காணப்படும் கருப்பொருளை ஆராய்தல்.<br>• கவிதை, கதை, உரைநடை போன்ற இலக்கியப் படிவங்களைத் திறனாய்வு செய்வதற்கான குறிப்புகளைத் திரட்டுதல்.<br>• திரட்டப்பட்ட குறிப்புகளின் துணையுடன் இலக்கியப் படிவத்தைத் திறனாய்வு செய்தல்.<br>• கருப்பொருளோடு தன் சொந்தக் கருத்தைத் தொடர்புபடுத்தி விளக்குதல். |

| **கற்றல்பேறு** | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 8.2 செய்யுளையும் கவிதையையும் உரைநடையில் எழுதுவர். | **படிநிலை 1**<br>கவிதை, செய்யுள் ஆகியவற்றைப் புரிந்துகொள்வர்; உரைநடையில் எழுதுவர். | • தெரிவு செய்யப்பட்ட கவிதைகளையும் செய்யுள்களையும் ஆழ்ந்து வாசித்தல்.<br>• கவிதைகளும் செய்யுள்களும் உணர்த்தும் கருத்துகளைக் குழுமுறையில் கலந்தாராய்தல்.<br>• கவிதை, செய்யுள் ஆகியவற்றின் கருத்துகளைத் தொகுத்தல்.<br>• திரட்டப்பட்ட கருத்துகளை நிரல்படுத்துதல்.<br>• நிரல்படுத்திய கருத்துகளைச் சிந்தனைமீட்சி செய்தல்.<br>• கவிதை, செய்யுள் ஆகியவற்றின் கருத்துகளைப் பிழையின்றி உரைநடையில் எழுதுதல். |
| | **படிநிலை 2**<br>கவிதை, செய்யுள் ஆகியவற்றைப் புரிந்துகொள்வர்; தொகுத்து எழுதுவர். | • கவிதை, செய்யுள் ஆகியவற்றை ஆழ்ந்து வாசித்தல்.<br>• கவிதை, செய்யுள் ஆகியவற்றின் உட்பொருளைக் கலந்தாராய்ந்து திரட்டுதல்.<br>• கவிதை, செய்யுள் ஆகியவற்றின் கருத்துகளைக் கண்ணிகளுக்கேற்ப நிரல்படுத்துதல்.<br>• நிரல்படுத்திய கருத்துகளை முழுமையாக உரைநடையில் தொகுத்து எழுதுதல். |

| **கற்றல்பேறு** | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 3**<br>கவிதை, செய்யுள் ஆகியவற்றைப் புரிந்துகொள்வர்; உரைநடையில் விளக்கி எழுதுவர். | • கவிதை, செய்யுள் ஆகியவற்றை ஆழ்ந்து வாசித்தல்.<br>• அகரமுதலியின் துணையுடன் கவிதை, செய்யுள் ஆகியவற்றின் அருஞ்சொற்களுக்குப் பொருள் காணுதல்.<br>• கவிதை, செய்யுள் ஆகியவற்றின் பொருளை வரிகளுக்கேற்ப நிரலோட்டவரைவில் எழுதுதல்.<br>• மேற்கோள் நூல்களின்வழி கவிதை, செய்யுள் ஆகியவற்றின் பொருள் தொடர்பான மேல் விவரங்களைத் திரட்டுதல்.<br>• கவிதை, செய்யுள் ஆகியவற்றின் பொருளைச் சொந்த நடையில் விளக்கி எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 9.1 பொருத்தமான மொழியில் கருத்துச்செறிவு, நற்சிந்தனை ஆகியவற்றை உள்ளடக்கிய எழுத்துப் படிவங்களைப் படைப்பர். | **படிநிலை 1**<br>கருத்துச்செறிவு, நற்சிந்தனை ஆகியவற்றை உள்ளடக்கிய எழுத்துப் படிவங்களைப் படைப்பர்.<br>- கதை<br>- உரையாடல் | கதை / உரையாடல்<br>• கதை / உரையாடலை வாசித்தல்.<br>• கதை / உரையாடலில் உள்ள கூறுகளை மீட்டுணர்தல்.<br>• கொடுக்கப்பட்ட தலைப்பிற்கேற்பக் கருத்துகளைக் குறிப்பெடுத்தல்.<br>• பல்வேறு ஊடகத்தின்வழி பெறப்பட்ட கருத்துகளைக் கொண்டு குறிப்புகளை விரிவுபடுத்துதல்.<br>• கருத்துகளை 250 சொற்களுக்குக் குறையாமல் விரிவுபடுத்தி எழுதுதல். |
| | **படிநிலை 2**<br>கருத்துச்செறிவு, நற்சிந்தனை ஆகியவற்றை உள்ளடக்கிய எழுத்துப் படிவங்களைப் படைப்பர்.<br>- உரை<br>• சிறப்புரை<br>• திறப்புரை<br>• தலைமையுரை<br>- கடிதம்<br>• முறையீட்டுக் கடிதம்<br>விண்ணப்பக் கடிதம் | **உரை / கடிதம்**<br>• உரை / கடிதத்தை வாசித்தல்.<br>• உரை / கடிதம் ஆகியவற்றின் அமைப்பு முறையை மீட்டுணர்தல்.<br>• மனவோட்டவரைவில் கருத்துகளைப் படைத்தல்.<br>• கருத்துகளை விவரித்து 250 சொற்களுக்குக் குறையாமல் உரை / கடிதம் எழுதுதல். |

<table>
<tr><th>கற்றல்பேறு</th><th>படிநிலை வளர்ச்சி</th><th>மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள்</th></tr>
<tr><td></td><td>படிநிலை 3<br>கருத்துச்செறிவு, நற்சிந்தனை ஆகியவற்றை உள்ளடக்கிய எழுத்துப் படிவங்களைப் படைப்பர்.<br>- கட்டுரை<br>• வருணனை<br>• விவாதம் / வாதம்<br>• விளக்கம்<br>- கவிதை</td><td>கட்டுரை<br>• தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்பைக் குழுமுறையில் ஆராய்தல்.<br>• முதன்மை, சார்பு கருத்துகளை அடையாளங்கண்டு மனவோட்டவரைவில் எழுதுதல்.<br>• குழுக்களுக்கிடையே கருத்துகளை ஒப்பீடு செய்தல்.<br>• கருத்துகளை முதன்மைக்கேற்ப நிரல்படுத்துதல்.<br>• நிரல்படுத்திய கருத்துகளை விரிவாக்கம் செய்தல்.<br>• விரிவாக்கம் செய்த கருத்துகளை 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுதல்.<br><br>கவிதை<br>• நன்னெறிப்பண்புகள் அடங்கிய கவிதையை வாசித்தல்.<br>• கவிதையிலுள்ள சொற்களின் பொருள் அறிதல்.<br>• கவிதையின் கருப்பொருளைக் கண்டறிந்து விளக்குதல்<br>• கவிதைகளில் அடங்கியுள்ள நன்னெறிப்பண்புகளை அடையாளங்கண்டு விவரித்து எழுதுதல்.</td></tr>
</table>

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 9.2 பிறருடைய படைப்புகளைக் கருத்துப்பிழையின்றி ஒரு வடிவத்திலிருந்து வேறு வடிவத்திற்கு மாற்றியமைப்பர். | **படிநிலை 1**<br>கவிதையைக் கருத்துப்பிழையின்றி உரைநடையில் மாற்றி எழுதுவர். | • படித்த, கேட்ட கவிதையைப் புரிந்துகொள்ளுதல்.<br>• கவிதையில் அமைந்துள்ள முக்கியக் கருத்துகளை அடையாளங்காணுதல்.<br>• அடையாளங்கண்ட முக்கியக் கருத்துகளைத் தொகுத்து விரிவாக்கி உரைநடையில் எழுதுதல். |
| | **படிநிலை 2**<br>நேர்காணலைக் கருத்துப் பிழையின்றி உரைநடையாக எழுதுவர். | • நேர்காணலை வாசித்துப் புரிந்துகொள்ளுதல்.<br>• நேர்காணலுக்கும் உரைநடைக்கும் உள்ள வேறுபாடுகளை மீட்டுணர்தல்.<br>• நேர்காணலில் காணும் முக்கியக் கருத்துகளை அடையாளங்காணுதல்.<br>• நேர்க்கூற்று வாக்கியங்களை அயற்கூற்று வாக்கியங்களாக மாற்றும் வழிவகைகளை அறிதல்.<br>• முக்கியக் கருத்துகளை முறைமைக்கேற்ப நிரல்படுத்துதல்.<br>• நிரல்படுத்திய கருத்துகளைத் தொகுத்து உரைநடையாக எழுதுதல். |

| **கற்றல்பேறு** | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 3**<br>உரையாடலைக் கருத்துப்பிழையின்றி கட்டுரையாக மாற்றி எழுதுவர். | • உரையாடலைச் செவிமடுத்துப் புரிந்துகொள்ளுதல்.<br>• உரையாடலுக்கும் கட்டுரைக்கும் உள்ள அமைப்பு முறை வேறுபாடுகளை மீட்டுணர்தல்.<br>• செவிமடுத்த உரையாடலில் அடங்கிய முக்கியக் கருத்துகளைக் குறிப்பெடுத்தல்; பட்டியலிடுதல்.<br>• முக்கியக் கருத்துகளை முதன்மைக்கேற்ப நிரல்படுத்துதல்.<br>• நிரல்படுத்திய கருத்துகளைக் கட்டுரையாக எழுதுதல். |

| **கற்றல்பேறு** | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 9.3 கவிதைகளை நயத்துடன் வாசிப்பர். | **படிநிலை 1**<br>கவிதை, செய்யுள் ஆகியவற்றின் பொருளறிந்து நயத்துடன் ஒப்புவிப்பர். | **கவிதை**<br>• கவிதையை வாசித்தல்.<br>• எளிமையான கவிதையில் சந்தம், எதுகை, மோனை முதலியவற்றை அறிதல்.<br>• கவிதையில் காணப்படும் சொல்நயம், பொருள்நயம், உணர்ச்சி ஆகியவற்றை ஆராய்ந்து அறிதல்.<br>• கவிதையை மனனம் செய்து நயத்துடன் ஒப்புவித்தல்.<br><br>**செய்யுள்**<br><br>• செய்யுளை வாசித்தல்.<br>• கருத்தூற்றுமுறையில் செய்யுளின் பொருளைக் கலந்தாராய்தல்.<br>• செய்யுளில் காணப்படும் சொல்நயம், மொழிநயம், உணர்ச்சி ஆகியவற்றை ஆராய்ந்து அறிதல்.<br>• செய்யுளில் காணப்படும் சொல்நயம், மொழிநயம், பொருள்நயம் ஆகியவற்றை நினைவுகூர்ந்து ஒப்புவித்தல்.<br>• செய்யுளை மனனம் செய்து ஒப்புவித்தல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 2**<br>கவிதை, செய்யுள் ஆகியவற்றின் பொருளறிந்து நயத்துடனும் உணர்ச்சியுடனும் ஒப்புவிப்பர். | *கவிதை*<br>• கவிதையைச் செவிமடுத்தல்.<br>• அகரமுதலியின் துணையுடன் கவிதைக்கான சொற்பொருள் விளக்கத்தை அறிதல்.<br>• கவிதையை வாசித்து சொல்நயம், பொருள்நயம், மொழிநயம், உணர்ச்சி ஆகியவற்றை ஆராய்ந்து அறிதல்.<br>• கவிதையின் நயம், உணர்ச்சி ஆகியவற்றை உய்த்துணர்தல்.<br>• இரண்டு கண்ணிகளுக்கு மேலுள்ள கவிதையை நயத்துடனும் உணர்ச்சியுடனும் ஒப்புவித்தல்.<br><br>**செய்யுள்**<br>• செய்யுளைச் செவிமடுத்தல்.<br>• செய்யுளின் பொருளுணர்தல்.<br>• மேற்கோள் நூல்களின் துணையுடன் செய்யுள் தொடர்பான மேல் விவரங்களைத் திரட்டுதல்.<br>• செய்யுளின் நயம், உவமைச் சிறப்பு, உணர்ச்சி, சொல்லாட்சி, கருத்துச்செறிவு ஆகியவற்றை ஆராய்ந்தறிதல்; நினைவுகூர்ந்து விளக்குதல்.<br>• செய்யுளை மனனம் செய்து நயத்துடனும் உணர்ச்சியுடனும் ஒப்புவித்தல். |

| **கற்றல்பேறு** | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 3**<br>கவிதை, செய்யுள் ஆகியவற்றின் பொருளறிந்து நயத்துடனும் உணர்ச்சியுடனும் பாவனையுடனும் ஒப்புவிப்பர். | *கவிதை*<br>• கவிதையை வாசித்தல்.<br>• கவிதையில் காணப்படும் மொழிநயம், உணர்ச்சி, சொல்லாட்சி, கருத்துச்செறிவு, நன்னெறிப்பண்பு ஆகியவற்றை ஆராய்ந்து விளக்குதல்.<br>• கவிதையைப் பொருளுணர்ந்து உணர்ச்சியுடனும் நயத்துடனும் கூறுதல்.<br>• நான்கு கண்ணிகளுக்கு மேலுள்ள கவிதையை மனனம் செய்து நயத்துடனும் உணர்ச்சியுடனும் பாவனையுடனும் ஒப்புவித்தல்.<br><br>**செய்யுள்**<br>• செய்யுளைச் செவிமடுத்தல்.<br>• செய்யுளின் பொருளுணர்தல்.<br>• செய்யுளின் நயம், உவமைச் சிறப்பு, உணர்ச்சி, சொல்லாட்சி, கருத்துச்செறிவு, ஆகியவற்றை ஆராய்ந்தறிதல்; நினைவுகூர்ந்து விளக்குதல்.<br>• செய்யுளின் முழுப்பொருளையும் ஆராய்ந்து எழுதுதல்.<br>• செய்யுளைப் பொருளுணர்ந்து உணர்ச்சியுடனும் நயத்துடனும் வாசித்தல்.<br>• செய்யுளை மனனம் செய்து நயத்துடனும் உணர்ச்சியுடனும் பாவனையுடனும் ஒப்புவித்தல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 9.4 பழமொழி, இணைமொழி, மரபுத்தொடர், உவமைத்தொடர், இரட்டைக்கிளவி ஆகியவற்றைப் பொருளறிந்து பயன்படுத்துவர். | **படிநிலை 1**<br>பழமொழி, இணைமொழி, மரபுத்தொடர், உவமைத்தொடர், இரட்டைக்கிளவி ஆகியவற்றின் பொருளறிந்து வாக்கியம், கட்டுரை, கதை ஆகியவற்றில் பயன்படுத்துவர். | • நீதிக்கதைகள், சிறுகதைகள் போன்ற படிவங்களை வாசித்தல்.<br>• படிவங்களில் காணப்படும் மொழியணிகளைப் பட்டியலிடுதல்.<br>• மொழியணிகளைப் பொருள் விளங்க வாக்கியங்களில் அமைத்துக் காட்டுதல்.<br>• மொழியணிகளைப் பொருள் விளங்கச் சூழல்களில் விளக்கி எழுதுதல்.<br>• மொழியணிகளைக் கட்டுரை கதைகளில் சூழலுக்கேற்பப் பயன்படுத்துதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 2**<br>பழமொழி, இணைமொழி, மரபுத்தொடர், உவமைத்தொடர், இரட்டைக்கிளவி ஆகிய மொழியணிகளைப் பொருளறிந்து வாக்கியம், கட்டுரை, கதை, உரை ஆகியவற்றில் பயன்படுத்துவர். | • மொழியணிகள் இடம்பெற்ற பாடப்பகுதியை வாசித்தல்.<br>• சூழலுக்கேற்ப மொழியணிகளின் பொருளை ஊகித்து விளக்குதல்.<br>• கருத்தூற்றுமுறையின்வழி மொழியணிகளின் பொருள் அறிதல்.<br>• மொழியணிகளில் அடங்கியுள்ள பண்புக்கூறுகளைச் சிந்தனைமீட்சி செய்தல்.<br>• மொழியணிகளைப் பொருள் விளங்க வாக்கியங்களில் அமைத்தல்.<br>• மொழியணிகளைக் கட்டுரை, கதை, உரை ஆகியவற்றில் சூழல் பொருந்த பயன்படுத்துதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 3**<br>பழமொழி, இணைமொழி, மரபுத்தொடர், உவமைத்தொடர், இரட்டைக்கிளவி ஆகியவற்றின் பொருளறிந்து வாக்கியம், கட்டுரை, கதை, உரை, நாடகம் ஆகியவற்றில் பயன்படுத்துவர். | • நாடகங்களைச் செவிமடுத்தல்.<br>• நாடகத்தில் இடம்பெற்ற மொழியணிகளைப் பட்டியலிடுதல்.<br>• மொழியணிகளைப் பொருள் விளங்க சூழலுக்கேற்ப எழுதுதல்.<br>• மொழியணிகளைப் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்தல்.<br>• மொழியணிகளைக் கட்டுரை, கதை, உரை, நாடகம் ஆகியவற்றில் சூழலுக்கேற்பப் பயன்படுத்துதல். |

**இலக்கணம்**

மொழியாற்றலுக்கு அடிப்படையாக அமைவது இலக்கணமாகும். இலக்கணத்தை நேரடியாகக் கற்பிக்காமல் வரையறுக்கப்பட்டுள்ள கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய நடவடிக்கைகளுடன் ஒருங்கிணைத்துக் கற்பிக்கப் பரிந்துரைக்கப்படுகிறது. ஆகவே, மொழியை வழுவின்றிப் பயன்படுத்துவதற்குப் பின்வரும் இலக்கணக் கூறுகள் திட்டமிட்டுக் கற்பிக்கப்படவேண்டும்.

.

**1. எழுத்தியல்**

1.1 **குற்றியலுகரம்**

1.2 **முற்றியலுகரம்**

1.3 **இன எழுத்து**

உயிர்க் குறிலுக்கு உயிர் நெடில் இனமாகும்.

| | | |
|---|---|---|
| அ | - | ஆ |
| இ | - | ஈ |
| உ | - | ஊ |
| எ | - | ஏ |
| ஒ | - | ஓ |
| ஐ | - | இ |
| ஔ | - | ஊ |

**2. சொல்லியல்**

**2.1 சொல்**

- இயற்சொல்
- திசைச்சொல்
- வடசொல்
- கிரந்த எழுத்துகள்

**2.2 வினைச்சொல்**

- தன்வினை
- பிறவினை
- செய்வினை
- செயப்பாட்டுவினை
- குன்றியவினை
- குன்றாவினை

**2.3 யாப்பிலக்கணம்**

- சந்தம்
- எதுகை
- மோனை
- அசை

**3. தொடரியல்**

**3.1 நேர்க்கூற்று**

### 3.2 அயற்கூற்று

### 3.3 தொகாநிலைத் தொடர்

- எழுவாய்த் தொடர்
- விளித் தொடர்
- வினைமுற்றுத் தொடர்
- பெயரெச்சத் தொடர்
- இடைச்சொல் தொடர்
- உரிச்சொல் தொடர்
- அடுக்குத் தொடர்

## 4. புணரியல்

### 4.1 தோன்றல்

- உடம்படுமெய்
  - நிலைமொழி ஈற்றில் அ, ஆ, உ, ஊ முதலிய உயிர் எழுத்துகள் வந்து வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால் 'வ்' தோன்றும்.
    எகா: பல + ஆடுகள் = பலவாடுகள்
  - நிலைமொழி ஈற்றில் இ, ஈ, ஐ, முதலிய உயிர் எழுத்துகள் வந்து வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால் 'ய்' தோன்றும்.
    எ.கா: அணி + அழகு = அணியழகு

### 4.2 திசைப்பெயர்ப் புணர்ச்சி

எ.கா: வடக்கு + கிழக்கு = வடகிழக்கு

### 4.3 எண்ணுப்பெயர்

ஒன்று முதல் பத்து வரையிலான நிலைமொழியுடன் அதே வருமொழி எண்ணுப் பெயர் இணைதல்.

எ.கா: ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று

## 5. வலிமிகும் இடங்கள்

**5.1 ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி அஃறிணையாய் இருப்பின் வலிமிகும்**

எ.கா: குருவி + தலை = குருவித்தலை

**5.2 முற்றியலுகரச் சொற்களுக்குப்பின் வலிமிகும்**

எ.கா: திரு + கோயில் = திருக்கோயில்

**5.3 ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தில் வலிமிகும்**

எ.கா:பேசா + பையன் = பேசாப்பையன்

## 6. வலிமிகா இடங்கள்

**6.1 'ன்று, ந்து, ண்டு, ய்து' என்று முடியும் வினையெச்சங்களுக்குப்பின் வலிமிகாது**

எ.கா: என்று + கூறினார் = என்று கூறினார்

**6.2 உம்மைத் தொகையில் வலிமிகாது**

எ.கா: இரவு + பகல் = இரவுபகல்

**6.3 ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி உயர்திணையாய் இருப்பின் வலிமிகாது**

எ.கா: வள்ளி + திருமணம் = வள்ளி திருமணம்

## இலக்கியம்

### 1.0 செய்யுள்

#### 1.1 திருக்குறள்

i) எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு. (426)

ii) நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு. (784)

iii) இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. (987)

## 1.2 பல்வகைச் செய்யுள்

i) **கம்ப இராமாயணம்**
**(இயற்கை இன்பம்)**

குயிலினம் வதுவை செய்ய,
    கொம்பிடைக் குனிக்கும் மஞ்ஞை
அயில்விழி மகளிர் ஆடும்
    அரங்கினுக்கு அழகு செய்ய,
பயில்சிறை அரச அன்னம்
    பன்மலர் பள்ளி நின்றும்
துயிலெழ, தும்பி காலைச்
    செவ்வழி முரல்வ சோலை.

ii) **மணிமேகலை - பாத்திரம் பெற்ற காதை**
**(பசியின் கொடுமை)**

குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
.........................................................
பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்
இசைச்சொல் அளவைக் கென்நா நிமிராது
.........................................................
.....................

ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே

iii) **நன்னூல்**
**(மாணாக்கனது வரலாறு)**

அன்ன மாவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

## 1.3 பழமொழி

i) அவனன்றி ஓரணுவும் அசையாது.
ii) சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்.
iii) தர்மம் தலை காக்கும்.
iv) பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்.
v) முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
vi) தன் உயிரைப் போல மன்னுயிரையும் நினை.
vii) துணை போனாலும் பிணை போகாதே.
viii) மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
ix) மனக் கவலை பலக் குறைவு.
x) மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.

## 1.4 மரபுத்தொடர்

i) கருணைக் கடல்.
ii) இனிப்புக் காட்டுதல்.
iii) ஒத்துப் பாடுதல்.
iv) கயிறு திரித்தல்.
v) கானல் நீர்.
vi) தண்ணீர் காட்டுதல்.
vii) நெளிவு சுளிவு.
viii) கரைத்துக் குடித்தல்.
ix) கை கூடுதல்.
x) விழலுக்கு இறைத்தல்.

## 1.5 உவமைத் தொடர்

i) சிறகு இழந்த பறவை போல
ii) நுனிப்புல் மேய்ந்தாற் போல
iii) நீறு பூத்த நெருப்பு போல
iv) கொழு கொம்பற்ற கொடி போல
v) இலவு காத்த கிளி போல

## 1.6 இரட்டைக்கிளவி

i) வழவழ
ii) திருதிரு
iii) வெடவெட
iv) நசநச
v) சிலுசிலு